# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2396/60 - 2024 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2024.08.09

*2396/60 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், செக் போட் சிடி கொழும்பு (பிறைவேட்) லிமிடட் தொடர்பில் 2016, திசெம்பர் 06 ஆந் திகதிய 1996/26 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் சொல்லப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக, இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன் :-

கருத்திட்டக் கம்பெனிக்கு 2016, செத்தெம்பர் 07 ஆந் திகதியிலிருந்து தொடங்கி 2024, செத்தெம்பர் 06 ஆந் திகதியன்று முடிவடைகின்ற எட்டு (08) ஆண்டுகளைக் கொண்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியொன்றை (PIP) வழங்கி, 2016, திசெம்பர் 06 ஆந் திகதிய 1996/ 26 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் பந்தியானது, கருத்திட்டக் கம்பெனி எஞ்சியுள்ள நடைமுறைப்படுத்தற் பணிகளைப் பூர்த்திசெய்து அதன் ஒட்டுமொத்த கருத்திட்டத்தினதும் தொழிற்பாடுகளைத் தொடங்குவதற்கென, 2024, செத்தெம்பர் 07 ஆந் திகதியன்று பயனுக்குவந்து 2027, யூன் 30 ஆந் திகதியன்று முடிவடையும் வகையில் முப்பத்துமூன்று (33) மாதங்கள் மற்றும் இருபத்துநான்கு (24) நாட்கள் கொண்ட மேலதிக காலப்பகுதியொன்றுக்கு சொல்லப்பட்ட கருத்திட்ட நடைமுறைப்படுத்தற் காலப்பகுதியை நீடிப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
*2024, ஓகத்து 08.*

EOG *08-0138*


1A - PG 6820 — 05 (2024/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*